IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

O.S.NO.27/2015 E.P.NO. R.C.O.P.
I.A.

Deposition of Witness PW2 / DW

Name : நாராயணசாமி

Father's Name /W/o : ராஜி ரெட்டி

Religion : இந்து

Caste : MBC

Calling : விவசாயம்

Address : மாங்காட்டுசேரி கிராமம் அரக்கோணம்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 11.12.2018

**Chief Examination**:

*குறுக்கு விசாரணை - வாதி என்னுடைய உடன்பிறந்த சகோதரர்தான். வாதி அழைத்ததின் பேரில்தான் அவர் சார்பாக நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வாதி ஒப்பந்தம் போட்டு வாங்கிய சொத்தை வேறொருவர் வாங்கிவிட்டதால் வழக்கு போட்டுள்ளார். சொத்தை தயாளன் என்பவர் கிரையம் வாங்கினார். வாதி தயாளன் கிரையவாங்கிய விவரம் தெரிந்தபின்புதான் தாவா போட்டுள்ளார் என்றால்சரிதான். தாவாவில் சொல்லப்பட்டுள்ள ஒப்பந்தத்தை தயானந்த முதலியார் வாதிக்கு எழுதிக்கொடுத்தார். ஒப்பந்தமானது 01.06.1978ல் ரூ.10500க்கு போட்டப்பட்டது அப்போது நான் உடனிருந்தேன். கிரையஒப்பந்தத்தில் நான் சாட்சிகையொப்பம் போடவில்லை செல் வைக்கும்போதுதான் நான் கையொப்பம் போட்டேன். ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ள ஷரத்துக்கள் எனக்கு தெரியும் ஒப்பந்த தேதியில் வாதி ரூ.2000 பணம் கொடுத்தார். வா.சா.ஆ1 ஒப்பந்தத்தில் மீதிகிரைய தொகையை எவ்வளவு காலக்கட்டத்திற்குள் செலுத்தவேண்டும் என்பது நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 15.10.1978க்குள் மீதி கிரையத்தொகையை செலுத்தி பத்திரப்பதிவை செய்துகொள்ளவேண்டும் என்றால் சரிதான். மேற்படி கிரையஆவணத்தில் மீதி கிரைய தொகையை பெற்றுக்கொண்டு பத்திரபதிவு செய்துகொடுக்கவேண்டுமென்றும் இல்லாவிட்டால் வாதி கொடுத்த அட்வான்ஸ் தொகைக்கு 2மடங்கு தொகை*

செலுத்துவதாகவும் மற்றும் வாதிக்கு ஏற்படும் செலவுகளையும் கட்டிக்கொடுப்பதாக கிரையஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ளது உண்மைதான். அவ்வாறு மீதிகிரையத்தொகையை கொடுக்காவிட்டால் அட்வான்ஸ் தொகையை இழக்க வேண்டுமென்று சொல்லப்பட்ட விவரமும் தெரியும். 15.10.1978க்குள் மீதி தொகையை செலுத்தி வாதி அவர் பெயரில்கிரையப்பத்திரம் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். அந்த காலகட்டத்திற்கு பின்பு வாதி கிரையத்தொகையை கொடுத்துவிட்டார். 01.06.1978ல் கிரைய ஒப்பந்த போட்டப்பட்ட தேதியிலேயே சுவாதீனத்தை ஒப்படைப்பதாக ஒப்பந்த பத்திரத்தில் எதுவும் எழுதப்படவில்லை ஆனால் அன்றைய தினமே வாதிக்கு சுவாதீனம் ஒப்படைக்கபட்டது. சுவாதீனஒப்படைப்பிற்கு எழுத்துபூர்வமான ஆதாரம் எதுவும் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தில் மேற்படி ஒப்பந்த தினத்தன்றே சுவாதீன ஒப்படைப்பு செய்யபட்டுள்ள விவரத்தை நான் சொல்லவில்லை. ஒப்பந்ததேதிக்கு பின்பு நான் தயானந்த முதலியாரை நான் பார்க்க வில்லை என்றால் சரியல்ல அவர் தான் வந்து பணம் பெற்றுச்சென்றார். தயானந்த முதலியார் மைசூரில் எந்த இடத்தில் வசித்து வந்தார் என்று எனக்கு தெரியாது. தயானந்த முதலியாரை நாங்கள் சென்று மைசூரில் பார்க்க வில்லை அவர் தான் எங்கள் வீட்டிற்கு வந்தார். ஒப்பந்தம் போட்டபிறகு எவ்வளவு வருடம் கழித்து தயானந்த முதலியார் எங்களுடைய வீட்டிற்கு வந்தார் என்பது எனக்கு ஞாபகம் இல்லை. அவர் குடும்பத்தோடுதான் மாங்காட்டுச்சேரிக்கு வந்தார். தாவா சொத்தைத்தவிர வேறு சொத்து மாங்காட்டுசேரியில் தயானந்த முதலியாருக்கு கிடையாது. மைசூரிலிருந்து வரும்பொழுது தயானந்த முதலியார் அவருக்கு சொந்தமான வீட்டுமனையில் தான் தங்கினார். அந்த வீட்டின் கதவு இலக்க எண் எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்தத்தில் வீடு எதுவும் சொல்லப்படவில்லை என்றும் காலிமனைதான் குறிப்பிட பட்டுள்ளது என்றும் சொல்லப்பட்டுள்ளது.

இந்நிலையில் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.